W.M. ASLam

# நினைவு மலர்

SERO
SRI LANKA

## செறோ ஸ்ரீலங்கா

## Social Encouragement Research Organization
(சமூக முன்னேற்ற ஆய்வு அமையம்)

**2003 - 2013**

பத்தாண்டு நிறைவும், அங்கத்தவர்கள் மற்றும்
போட்டியாளர்கள் கௌரவிப்பும்

"எமது மாற்றமே சமுதாயத்தின் மாற்றம்"

# நினைவு மலர்

**வெளியீட்டுக் குழு:**

**எம்.ஜருக் மொஹமட்**
**றினோஸ் ஹனீபா**
**எம்.எஸ்.எப் நத்வா**

Published on: 27.04.2013

Arts & Cultural Unit
SERO- SRI LANKA


**வெளியீடு :**

கலை கலாசாரப் பிரிவு,
சமூக முன்னேற்ற ஆய்வு அமையம்
183, நகர மண்டப வீதி, கல்முனை - 13

## செறோ ஸ்ரீலங்காவின் நிறைவேற்றுச் சபையின் அங்கத்தவர்கள்



றினோஸ் ஹனீபா
தலைவர்



எஸ்.எல்.எம் அனஸ்
உப தலைவர்



எம்.ஜே.எம்.அனஸ்
பொதுச் செயலாளர்



எம். ஜருக் மொஹமட்
செயலாளர், IT மற்றும்
நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர்



எம்.ஐ.எம் நியாஸ்
இணைப்புச் செயலாளர்




எஸ்.எம்.எம் சியாத்
பொருளாளர்



ஏ.எம்.எம் சியாம்
கணக்காய்வாளர்



ஏ.சி.எம் ஜலீல்
தவிசாளர்



ஏ.அனிஸ்
கல்வி மற்றும்
ஆய்வுப் பிரிவு



எம்.ஏ.சி ஸாஹிர் கரீம்
கலை மற்றும்
கலாசாரப் பிரிவு



ஏ.எம் பாயிஸ்
தொழில் வழிகாட்டல்
மற்றும் ஊடகப் பிரிவு



ஏ.எல்.எம். நியாஸ்
சமூக சேவை மற்றும்
அனர்த்தப் பிரிவு



யு.எல்.எம். ஜெஸ்மிர்
விளையாட்டு மற்றும்
திறன் அபிவிருத்திப் பிரிவு

## தூர நோக்கு

சமூகத்தின் தேவைகளை இனங்கண்டு, இயலுமானவரை நிவர்த்தி செய்வதனூடாக நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பினை வழங்குவதோடு மறுமையில் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுதல்.

## இலக்கு

சமூகத்தில் தேவையுடையவர்களின் தொழில் திறனைக் கட்டியெழுப்புவதோடு அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற அரச நிறுவனங்கள் மற்றும் சமூக சேவை நிறுவனங்களுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களையும் சமூகத்தில் சமத்துவமாக வாழ வழிகாட்டல்.



# தேசிய காங்கிரஸின் தலைவரும், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சருமான கௌரவ அல்-ஹாஜ் ஏ.எல்.எம். அதாஉல்லா அவர்களின் ஆசிச் செய்தி

செறோ ஸ்ரீலங்கா, சமூகத்தில் பல சேவைகளைச் செய்து இன்று 10 ஆண்டுகளை பூர்த்தி செய்திருக்கின்றது. அதனை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களையும், தனது அங்கத்தினர்களையும் பாராட்டியும், கௌரவித்தும் நடாத்தப்படும் நிகழ்வு மகிழ்ச்சியைத்தருகிறது. இதனையொட்டி வெளியிடப்படும் மலருக்கு ஆசிச் செய்தியினை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றேன். (அல்ஹம்துலில்லாஹ்)

இச்சமூக முன்னேற்ற ஆய்வு அமைப்பானது சமூக முன்னேற்றத்திற்காக பல சேவைகளை செய்து வந்திருக்கின்றது. குறிப்பாக இயற்கை அனர்த்தங்களின் போது மக்களின் அன்றாட தேவைகளை நிவர்த்தி செய்வதில் பெரும் பங்கெடுத்து அர்ப்பணிப்புடன் நடந்து வந்துள்ளமை நினைவு கூறத்தக்க விடயமாகும்.

மேலும் இச்சமூக சேவை அமைப்பு மாணவர்களின் கல்வி, கலாசார, விளையாட்டு முன்னேற்றத்திற்காகவும், படித்துவிட்டு தொழிலின்றி காணப்படும் இளைஞர் யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்கான வழிகாட்டல்களையும் மற்றும் விழிப்புணர்வு கருத்தரங்குகளையும் அண்மைக்காலமாக நடாத்தி வந்தமையையும் பாராட்டுகின்றேன்.

அங்கத்தவர்களையும், போட்டியில் வெற்றி பெற்றவர்களையும் கௌரவிக்கும் இந்நிகழ்வினை வாழ்த்துவதோடு மேலும் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக செறோ ஸ்ரீலங்கா அமைப்பானது நீடித்து நிலைத்து இன்னும் சமூக சேவையாற்ற வேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றேன். மேலும் இவ்மைப்பின் தலைவர் உள்ளிட்ட அங்கத்தவர்களையும் வாழ்த்துகின்றேன்.

**ஏ.எல்.எம். அதாஉல்லா (பா.உ)**
**தலைவர் – தேசிய காங்கிரஸ்**
**உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர்**

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சட்டத்தரணி ஆரிப் சம்சுடீன் வழங்கிய வாழ்த்துச் செய்தி

சமூக முன்னேற்ற ஆய்வு அமையத்தின் பத்தாண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஆசியுரை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உண்மையில் சமூக முன்னேற்ற ஆய்வு அமையமானது இப்பிராந்தியத்தில் இயங்கி வருகின்ற மிக முக்கியமான சமூக சேவை அமைப்பாகும். மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதை நோக்காகக்கொண்டு, கடந்த பத்து வருடங்களாக ஏராளமான சவால்களுக்கு மத்தியில் இயங்கி வருவது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியதும் போற்றப்பட வேண்டியதுமான செயற்பாடாகும்.

எமது பிரதேசத்தின் கல்வி, சமூக, கலாசார விடயங்களில் அதி உன்னிப்பாக சேவையாற்றி வருவதன் மூலம் பல சாதனை மைல்கல்களை இவ்வமையம் ஈட்டி வருகிறது என்பது கண்கூடு. வறிய மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்துதல், கல்வியில் சாதனை படைப்பவர்களை கௌரவித்தல் போன்ற செயற்பாடுகளின் வாயிலாக சமூக முன்னேற்ற ஆய்வு அமையம் தன்னை அர்ப்பணித்தே சேவையாற்றுகிறது. இவ்வமையத்தின் தலைவர், செயலாளர் மற்றும் ஏனைய அனைத்து உறுப்பினர்களும் மகோன்னத பணியில் தம்மை இணைத்துள்ளனர் என்றால் அது மிகையல்ல. சேவை மனப்பான்மை என்பது அனைவருக்கும் அத்தனை எளிதில் கை கூடுவதில்லை. சமூகத்தின் மீது அக்கறை கொண்டு சமூகத்தினை ஒரு சிறந்த, உயர்ந்த சமூகமாக மாற்றிட பலரின் மனதில் எண்ணம் ஓடிக் கொண்டிருக்கும். பிறருக்குப் பயனளிக்கும் வகையில் அல்லது பிறருக்கேற்பட்டுள்ள துன்பத்தை அகற்றும் சேவை, என்பதே சமூக சேவைக்கான பொது வரைவிலக்கணமாகும்.

நவீன காலத்தில் சமூக சேவை என்பது வளர்ச்சிபெற்ற எல்லா சமூகங்களிலும் நாடுகளிலும் அபிவிருத்திக்கும் பண்பாட்டுப் பரவலுக்கும் அதி முக்கிய முறைவழியாகவே கருதிச் செயற்பட்டு வருகின்றது. சமூக சேவையில் இன்று நிபுணத்துவம் பெற்ற குழுக்கள், இயக்கங்கள் உலகலாவிய மட்டத்தில் இயங்கி வருகின்றன. அவர்களுக்கென்று அடிப்படை விதிகள், நியதிகள், கோட்பாடுகள் உள்ளன. சமூக சேவைக்கென தயார்படுத்தப்பட்டவர்களைக் கொண்டு இப்பணியை மேற்கொள்ளும் போது நல்ல அறுவடைகளைப் பெற முடியும்.

சமூக சேவைக்கு மானுட, ஒழுக்க, நாகரீக, கல்வி, சுகாதார, அரசியல் பொருளாதார தூண்டற் காரணிகளும் இருக்கவே செய்கின்றன. அது புதிதாக உருவாக்கப்பட்டவையாகவோ, தற்காப்பாகவோ, நிவாரணியாகவோ இருக்க முடியும். அது மனிதனை, தனியனாகவும், குழுவாகவும், சமூகமாகவும் உயர்த்த உதவுகின்றது. இம்மூன்று நிலைகளிலும் மனித நலன்களை இயைபுபடுத்தத் துணை செய்கின்றது. தனிநபருக்கும் அவனது சூழலுக்கும் இடையில் இயைபை ஏற்படுத்துகின்றது. எத்தகைய பிரச்சினையாக இருந்தாலும் அதனைத் தீர்த்துக்கொள்ளுமாறு அது தனிமனிதனைத் தூண்டுகின்றது. அவனைப் பயிற்றுவிக்கின்றது.

சமூக சேவை ஊடாக தனிமனிதனுக்கும் சமூகங்களுக்கும் சட்டரீதியிலும் உடலியல் மற்றும் அறிவு ரீதியாகவும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை வழங்க முடியும். நவீன சமூகங்களிலும் அதன் இயங்குதிறன் அதிவினைமையுடையது. அது ஒவ்வொரு சமூகப் பிரச்சினையையும் தீர்க்க முயல்கின்றது. அது சமூகப் பிணிக்குப் பரிகாரம் செய்யத் தூண்டுகின்றது. ஒவ்வொரு சமூகப் போதாமையையும் நிறைவாக்க முயல்கின்றது. ஒவ்வொரு சமூக சக்தியையும் வளர்க்கின்றது. மனித மனங்களில் நம்பிக்கையை ஊட்டுகின்றது. ஒவ்வொரு சுய ஆற்றலையும் உச்ச அளவில் பயன்படுத்த அது வழிகாட்டுகின்றது.

சமூக முன்னேற்ற ஆய்வு அமையம் இத்தகைய சமூக சேவைகளை மிக வேகமாகவும், மிக நேர்த்தியாகவும் மேற்கொள்வதனை எல்லோரும் நன்கறிவர். இதுவரை சேவையாற்றியது போன்றே இனியும் பல்லாண்டுகள் சமூக முன்னேற்ற ஆய்வு அமையம் தங்களது செயற்பாடுகளை முன்னெடுக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

**சட்டத்தரணி ஆரிப் சம்சுடீன்**
**கிழக்கு மாகாணசபை உறுப்பினர்**

# அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் (NGO) இணைப்பாளர் ஐ.இஸ்மாலெப்பை முஹம்மது இர்பான் அவர்களின் வாழ்த்துச் செய்தி

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்
அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லஹி வபரகாத்துஹூ

எந்தவொரு நிறுவனமும் வளர்ச்சியடைவதும் வீழ்ச்சியடைவதும் அதனுடைய தூய்மையான நோக்கத்திலே தங்கியிருக்கின்றது, தூய்மை கெட்டுவிடும் போது நிறுவனத்தின் வளர்ச்சி தோல்வியிலே முடியும்.

எந்தவொரு நிறுவனமானாலும் கலந்தாலோசனை செய்தல், மற்றவர்களுக்கு மதிப்பளித்தல், வெளிப்படைத்தன்மை, ஒழுங்கான நிர்வாக கட்டமைப்பு, அல்லாஹ்வுக்கு மாத்திரம் பயப்படுதல், ஸகாத், ஸதகா என்பவற்றில் ஈடுபடுதல், தொழுகையயை நிலை நிறுத்துதல் போன்ற விடயங்களை கருத்தில் கொண்டு முக்கியமளித்து நிறுவனத்தை வழிநடாத்துமாயின் இவ்வுலகிலும், நிறுவனம் மேலோங்குவதுடன் மறுமையிலும் இந்நிறுவனத்துக்காக உழைத்த அனைவருக்கும் அல்லாஹ்வுடைய சன்மானம் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

இது தவிர, நிறுவன வளர்ச்சி என்பது தூய்மை, நீதி, நேர்மை, வாய்மை, பெருமை பாராட்டாமை, மற்றவரை இழிவாக மதிக்காமை போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு சமூகப்பணி செய்யும் போது நிச்சயமாக நிறுவனம் வளர்ச்சியடையும் எனக் கூறி, செறோ ஸ்ரீலங்கா எதிர்காலத்திலும் பல சாதனைகள் புரிந்து சமூகத்திற்குத் தேவையான பணிகளைத் தொடர்ந்தும் செய்ய வேண்டும் என்பதோடு இப்பாத்தாண்டு நிகழ்வில் எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

**ஐ.இஸ்மாலெப்பை முஹம்மது இர்பான்**
**அரச சார்பற்ற நிறுவனங்களின் (NGO) இணைப்பாளர்**
**அம்பாறை கச்சேரி.**
Mail : iilm.irfan@yahoo.com

## கல்முனை பிரதேச செயலாளர் "சாமஸ்ரீ தேசமான்ய", "ரத்னதீப" எம்.எம் நௌபல் அவர்களின் வாழ்த்துச் செய்தி

கடந்த 10 வருடகாலமாக செறோ ஸ்ரீலங்கா அமைப்பானது கல்வி, கலை கலாசார மற்றும் நலிவடைந்த மக்களின் தேவைகளை இனங்கண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றக்கூடிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வமைப்பின் மூலம் 2011 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட நிவாரண பொதிகளை வழங்கி பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவியமை இவ்வமைப்பின் சேவையின் ஓர் மைல்கல்லாகும்.

முன்பள்ளி மாணவர்களின் அடிப்படை கல்வி முன்னேற்றத்திற்காக முன்பள்ளி பாடசாலைகளை நிறுவி செயற்பட்டு வருகின்றமை வரவேற்கத்தக்க விடயமாகும். அதே போன்று மாணவ மாணவிகளின் எழுத்தாற்றலை முன்னேற்றும் பொருட்டு அகில இலங்கை ரீதியாக மேற்கொண்ட கவிதை, கட்டுரை போட்டியானது திறமையுள்ள மாணவர்களை இனங்கண்டு கொள்வதற்கும் அத்திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கும் செயற்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் பாராட்டத்தக்கது.

இவ்வமைப்பின் பத்தாண்டு சேவையினை நினைவு கூர்ந்து வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். அத்துடன் பல்வேறு வகையான சேவைகளை பொதுமக்களுக்கு வழங்கி நீண்டு நிலைத்திருந்து எமது பிரதேசத்தின் அபிவிருத்திற்கு பாடுபட வேண்டும் என்று இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

**எம்.எம் நௌபல்**
**பிரதேச செயலாளர்**
**கல்முனை**

## சாய்ந்தமருது பிரதேச செயலாளர் அல் ஹாஜ் ஏ.எல்.எம். சலீம் அவர்களின் வாழ்த்துச் செய்தி

அம்பாறை மாவட்டத்தில் சமூக முன்னேற்ற ஆய்வு அமையம் கடந்த 10 ஆண்டுகளாக வேரூன்றி அதனை கொண்டாடுவதையிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

குறிப்பாக கல்முனைப் பிராந்தியத்தில் கல்வி மட்டத்தினை மேம்படுத்துவதற்காக பல்வேறு கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது. பல்கலைக்கழகம் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிலும் பல்வேறு கல்விசார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது பாராட்டத்தக்க ஒன்றாகக் கருதுகின்றேன்.

இது மட்டுமன்றி தற்பொழுது ஜனாதிபதி செயலகத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள "மும்மொழி இலங்கை" என்ற செயற்திட்டத்திற்கேற்ப தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்ற சிங்கள மொழி விரிவாக்கல் பயிற்சிகளை இப்பிரதேச மாணவர்களுக்கு வழங்குவதிலும் சமூக முன்னேற்ற ஆய்வு அமையம் முன்னின்று செயற்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

எனவே, சமூக முன்னேற்ற ஆய்வு அமையம், தனது தசாப்தகால செயற்பாடுகளின் மூலம் பெற்ற அனுபவங்களைக் கொண்டு எதிர்கால சந்ததியினருக்கு மேலும் அவர்களது சேவைகளை விரிவாக்கி சிறப்பாக செயற்பட வாழ்த்துக்களை வழங்குவதுடன் இச்செயற்பாடுகளில் முன்னின்று உழைக்கின்ற இவ்வமைப்பின் தலைவர் உட்பட அதன் அங்கத்தவர்கள் அனைவரையும் பாராட்டுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

**ஏ.எல்.எம். சலீம்**
**பிரதேச செயலாளர்**
**சாய்ந்தமருது**

## கல்முனை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி வ. பற்பராசா வின் வாழ்த்துச் செய்தி

கல்வியும் கலைவளமும் ஒன்றாக இணைந்து சமயம் என்னும் நீரோட்டத்தில் நதியாக பாய்ந்து, காலத்தால் அழியாத காவிய நாயகனாக காவியங்கள் பல படைத்து வாழ்க்கை என்னும் புத்தகத்தில் வாழ்நாளை கைச்சாத்திட்டு நீங்காத சேவை ஆற்றி வரும் செறோ ஸ்ரீலங்கா நிறுவனம் என்றும் நிலைக்க வேண்டும்.

கலங்கி நிற்கும் மக்களை கலங்காதே என வாயாற சொல்லி வாழ்த்தி வழிகாட்ட வேண்டியது எமது தலையாய கடமையாகும். அந்த வகையில் கல்முனைப் பட்டணத்தில் கலங்கரை விளக்காக ஒளிகாட்டி மக்கள் சேவையை மகேசன் சேவையாக செய்துவரும் செறோ ஸ்ரீலங்கா நிறுவனத்தின் சேவையை பாராட்டுகின்றேன். அவர்களால் வெளியிடப்படும் மலர் மக்கள் வாழ்க்கைக்கு பயனுள்ளதாக எதிர்கால சந்ததியினருக்கு வழிகாட்டியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

செறோ ஸ்ரீலங்காவின் மூலம் நடாத்தப்பட்ட கவிதை மற்றும் கட்டுரை போட்டியானது மெச்சத்தக்கதாகும். அந்த வகையில் இனம், மதம் பாராது மக்களின் கல்வி உயர்வுக்காக பணியாற்றிவருகின்றமை என்றும் பாராட்டதக்கதாகும்.

அவர்களது சேவையும் பணியும் என்றும் தொடர வேண்டும் என்பதோடு, இப்பத்தாண்டு நிகழ்வினை வாழ்த்துவதோடு செறோ ஸ்ரீலங்காவின் தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்களையும் இத்தருணத்தில் வாழ்த்துகின்றேன்.

**திருமதி வ. பற்பராசா**
**கலாசார உத்தியோகத்தர்**
**பிரதேச செயலகம்**
**கல்முனை**

## அம்பாறை மாவட்ட ஜம்இய்யது உலமா சபைத் தலைவர் அல் ஹாஜ் மௌலவி எஸ். எச் ஆதம்பாவா (மதனி) அவர்களின் வாழ்த்துச் செய்தி

செறோ ஸ்ரீலங்கா எனப்படும் சமூக முன்னேற்ற ஆய்வு அமையம் அதன் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடும் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

வாலிப பருவம் மனித வாழ்வில் மிகப் பெருமதி மிக்க காலப்பகுதியாகும், சமூகத்திற்கு ஏதோ செய்ய வேண்டுமென துடிக்கும் காலமும் இதுவாகும், இக்காலத்தைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் "நீ வயோதிபத்தை அடையும் முன் வாலிப பருவத்தில் அதிக நன்மைகளை பெற்றுக் கொள்" என்றார்கள். மஸ்ஜித்தோடு தொடர்புள்ள இளைஞர்களின் சிறப்புக்களையும் அவர்கள் வியந்துரைத்துள்ளார்கள்.

இஸ்லாமிய வரலாற்றை நாம் நோக்கும் போது அவ்வக்கால இளைஞர்கள், இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புக்களை எம்மால் கண்டு கொள்ள முடியும். நபி (ஸல்) அவர்களின் மூத்த தோழர்களோடு இணைந்து இளம் ஸஹாபாக்கள் செய்த சேவைகளை எம்மால் மறந்து விட முடியாது.

இவ்வாறான பாரம் பரியத்தில் வந்த எமது இளைஞர்களும் எமது சமூகத்திற்கு ஏதோ செய்ய வேண்டும் என்ற ஆவலில் ஆற்றி வரும் சேவைகள் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

வல்ல அல்லாஹ்வின் திருப்தி என்ற ஒரே நோக்கத்திற்காக அவர்களின் சேவை அமைவதற்கு பிரார்த்திக்கின்றேன். மேலும் செறோ ஸ்ரீலங்கா அமைப்பினுடைய சேவைகள் தொடர வேண்டும் என்று வாழ்த்துகிறேன். அல் ஹம்துலில்லாஹ்.

**அல் ஹாஜ் மௌலவி எஸ். எச் ஆதம்பாவா (மதனி)**
***தலைவர்***
**அம்பாறை மாவட்ட ஜம்இய்யது உலமா சபை**

## செறோ அமைப்பின் தலைவர் "சாமஸ்ரீ தேசகீர்த்தி", "ரத்ன தீப" றினோஸ் ஹனீபா அவர்களின் வாழ்த்துச் செய்தி

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்
அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லஹி வபரகாத்துஹு

கடந்த பத்து வருடகாலமாக எமது அமைப்பானது பல சேவைகளை சமூகத்திற்கு ஆற்றிவருகின்றது. இவ்வமைப்பை பதிவதில் முன்னோடிகளாகயிருந்த ஸாஹிர் கரீம் மற்றும் எம்.ஜே.எம் அனஸ் இவ்நிகழ்வில் பாராட்டத்தக்கவர்கள். 2011ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது நாவிதன்வெளி, கல்முனை முஸ்லிம் பிரிவு, தமிழ் பிரிவு மற்றும் சாய்ந்தமருது போன்ற பிரதேச செயலகத்தினூடாக பத்து இலட்சம் பெறுமதியான நிவாரண பொருட்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி வைத்தமை அமைப்பின் வரலாற்றில் ஒரு மைல்கல்லாகும்.

ஏனைய அமைப்புக்களைப் போல் அல்லாது மஷூறா அடிப்படையில் முடிவெடுத்து சமூகத்தின் உயரிய நலன் கருதி செயற்பட்டுக் கொண்டு வருகின்றமை குறிப்பிட்டுக் கூறத்தக்க விடயமாக உள்ளது. ஒரு சமூகத்தின் எழுச்சி கல்வியிலே தங்கியிருக்கின்றது, ஒரு சமூகம் பின்னடைந்து செல்கின்றது என்றால் அது கல்வியில் வீழ்ச்சி அடைந்து செல்கின்றது என்றுதான் அர்த்தம். இதைக் கருத்தில்கொண்டு சமூதாயத்தின் கல்வி முன்னேற்றத்திற்காக இயன்றளவான நிகழ்ச்சிகளை பாடசாலை மற்றும் உயர் கல்வி நிறுவன மட்டத்தில் எமது அமைப்பு நடாத்திவருகின்றது.

இவ்வமைப்பின் சமூக முன்னேற்றப்பாதையில் நானும் ஒரு ஊழியனாக இருந்து சேவையாற்ற கிடைத்தமைக்கு முதற்கண் அல்லாஹ்வை போற்றியவனாக இவ்வமைப்பிற்காக தங்களது நேரங்களை, பொருட்களை, பணங்களை செலவு செய்து அதற்கான கூலியினை மறுமையில் மட்டும் எதிர்பார்க்கும் அங்கத்தவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் என் மனம் கனிந்த நன்றிகள்.

**றினோஸ் ஹனீபா** (BSW, LLB,PGDCPS)
***தலைவர்***
**செறோ ஸ்ரீலங்கா**

## செறோ அமைப்பின் பொதுச் செயலாளர் எம்.ஜே.எம் அனஸ் அவர்களின் வாழ்த்துச் செய்தி

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்
அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லஹி வபரகாத்துஹு

கடந்த பத்தாண்டுகளாக இவ்வமைப்பு சமூதாயத்திற்கு ஆற்றி வரும் பங்களிப்பு அளப்பெரியது, இலைமறைகாயாக நின்று பெருமை எதிர்பாக்காது தூய நோக்கத்தோடு சமூதாயத்தின் முன்னேற்றத்திற்காக பல சேவைகளை திருப்தியுடன் செய்திருக்கின்றது. எமது அமைப்பின் அங்கத்தவர்களின் தியாக உணர்வும், விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கும் இவ்வமைப்பின் மஸூறா தீர்மானங்களும் அடிப்படை பண்புகளாக காணப்படுகின்றது.

இன்று இலாப உலகில் இலாபமற்று சமூக சேவை செய்வது என்பது பெரும் தியாகம் என்பதை நாம் அறிவோம். இவ்வமைப்பினூடாக பல மாணவர்கள் தமது உயர்கல்வியினை கற்றிருக்கின்றார்கள் குறிப்பாக, தாருல் ஸலாம், ஹெம்மாதுகமையில் அமைந்துள்ள அரபு கலாபீடத்துக்கு எமது ஊரிலிருந்து 14 மாணவர்களை அனுப்பினோம். இன்று அவர்கள் ஆலிம்களாக பட்டதாரிகளாக வெளியாகியிருக்கின்றார்கள்.

ஊழ்ஹியா,இப்தார் மற்றும் மூவின சமூக நல்லொழுக்க நிகழ்ச்சித்திட்டங்களை ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தி வருகின்றமை என்றும் நினைவு கூறத்தக்கதாகும். மாணவர்களின் வாசிப்பு ஆற்றலை மேம்படுத்துவதற்காக அமைப்பின் அலுவலகத்தில் பொது நூலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதே போன்று, எனது பணியினை தொடர்ந்தும் செய்து வருகின்ற செயலாளர் எம். ஜருக் மொஹமட் அவர்களுக்கு என் மனம் கனிந்த நன்றிகள் இவ்வமைப்புக்கு அவர் ஆற்றிவருகின்ற பங்களிப்பு என்றும் மெச்சத்தக்கது அதே போன்று இவ்வமைப்புக்காக பணியாற்றிவரும் அத்தனை அங்கத்தவர்களுக்கும் இப்பத்தாண்டு நிகழ்வில் வாழ்த்துகின்றேன்.

**எம்.ஜே.எம் அனஸ்** (HNDA, Dip.in.Acc)
**பொதுச் செயலாளர்– செறோ ஸ்ரீலங்கா**

# செறோவின் பத்தாண்டு வரலாறும், சேவையும்.

சமூதாயத்தின் பல தேவைகளை எம்மால் நிறைவு செய்ய முடியாவிட்டாலும், எங்களால் இயலுமான ஒரு துறையினையாவது தெரிவு செய்து இச் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு அல்லாஹ்வின் மீது நம்பிக்கைவைத்து எமது சமூகம் கல்வியில் பின்னடைந்து செல்கிறது என்ற கவலையோடு பல முறை நாம் எங்களுக்கிடையில் பேசிக் கொண்டோம் எமது சமூகத்திற்கு எது தேவை எதை நாம் செய்ய வேண்டும் என்று இரவு பகல் பாராது சிந்தித்தோம் அதன் பயனாக முதலாவது அங்குராப்பணக் கூட்டம் சகோதரர் றினோஸ் ஹனீபா வீட்டில் 2003.01.03ம் திகதி வெள்ளிக்கிழமை பின்னேரம் 4.00 மணிக்கு இடம் பெற்றது. இதில் ஸாஹிர் கரீம், எஸ்.எல்.எம் அனஸ், றினோஸ் ஹனீபா, எம்.சி.எம் இஸ்ஹாக், எம்.ஜே.எம் அனஸ், எம்.ஜே. ஜெஸ்மீர், எம்.ஐ.எம் நியாஸ், ஜே.எம் நிஸாத், ஏ.ஆஸாத், எம். சியாத் உட்பட 12 சகோதர்கள் கலந்து கொண்டார்கள். இதில் அமைப்பின் பெயர் **"சமூக கல்வி ஆய்வு அமையம்"** என்ற பெயரை அமைப்பின் பெயராக சூட்டப்பட்டது. அமைப்பின் முதலாவது உத்தியோகபூர்வ நிர்வாகத் தெரிவு கமு/அல் ஸுஹறா வித்தியாலயத்தில் 2003.01.10ம் திகதி சனிக்கிழமை பின்னேரம் 4.00 மணிக்கு நடைபெற்றது இதில் அமைப்பின் முதல் தலைவராக ஸாஹிர் கரீம் தெரிவானார்.

## அமைப்பினால் இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்ட சேவைகள்.

- "கல்வியின் முக்கியத்துவம்" எனும் தலைப்பில் 2003.11.23 ஆம் திகதி கல்முனை அல்-ஸுஹறா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இதில் 100கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றார்கள்.

- கல்முனைக்குடி அல் ஸுஹறா பாடசாலையில் 2004.01.11ம் திகதி நடைபெற்ற அமைப்பின் பொதுச்சபைக் கூட்டத்தில் நடப்பாண்டுக்கான தலைவராக றினோஸ் ஹனீபா ஏகமானதாக தெரிவு செய்யப்பட்டார்.

- சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2004.12.29ஆம் திகதி சுனாமி அனர்த்த பணியகத்துடன் இணைந்து நிவாரணம் வழங்கப்பட்டது. இவ்நிவாரண பணியகம் முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் பேரியல் அஷ்ரப்பினால் கல்முனை நகர மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சுனாமியினால் அதிகமாக பாதிக்கப்பட்ட பிரதேசமாக கல்முனை இருந்தும் ஊடகங்களில் அதுபற்றி பெரிதாக அலட்டிக்கொள்ளாத போது, இதன் தாற் பெரியத்தை உணர்ந்து "அலைகளுடன் போராடி மீண்டவர்கள்" என்ற தலைப்பில் முதன் முதல் (01-14 ஜனவரி 2005) திகதி எங்கள் தேசம் பத்திரிகைக்கு பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு அவர்களின் பேட்டியினை அறிக்கையாக எழுதி, அம்பாறையில் கல்முனைத் தொகுதியும் பாதிக்கப்பட்டுள்ளது என்பதனை வெளியுலகிக்கு காட்டப்பட்டது. இவ்வறிக்கையினை தயாரிப்பதில் மிக சிரமங்களை மேற்கொண்ட சகோதர்களான றினோஸ் ஹனீபா, ஸாஹிர் கரீம் மற்றும் ஏ.எம் பாயிஸ் என்றும் நினைவு கூறத்தக்கவர்கள்.

முதற்கட்ட எமது சேவையாக 2005.02.22ஆம் திகதி சுனாமியில் தாய், தந்தையை இழந்த ஆண் பிள்ளைகள் 14ன்கு பேர் ஹெம்மாதுகம தாருல் ஸலாம் மத்ரஸாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. மேலும், சுனாமியில் கணவனை இழந்த விதவைகளுக்கு குர்ஆன் மற்றும் செலவுக்கான பணம் என்பவற்றை பணியகத்தினூடாக வழங்க அமைப்பு நடவடிக்கை மேற்கொண்டது.

கணனியில் இணையப்பாவணை பற்றி பெரிதாக அறிந்திராத காலப்பகுதியில் முதன் முறையாக மாணவர்களின் இணையப்பாவணை அறிவினை மேம்படுத்தும் நோக்கில் முதலாது இலவச கணனி தகவல் தொழில் நுட்ப பொது கருத்தரங்கு ஒன்றினை சகோதரர் றினோஸ் ஹனீபா முயற்சியால் CIM.NETWORK நிறுவனத்துடன் இணைந்து 30.12.2005 ஆம் திகதி கல்முனை நகர மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

அமைப்பின் தலைவர் றினோஸ் ஹனீபா தனது உயர் கல்வியினை கொழும்பில் தொடர சந்தர்ப்பம் கிடைத்ததால் 2006.02.14ம் திகதி பொதுச்சபை கூட்டப்பட்டு புதிய நிர்வாக சபையும் தலைவரும் தெரிவு செய்யப்பட்டனர் இதில் மீண்டும் முன்னால் தலைவர் எம்.ஏ.சீ சாஹீர் கரீம் தெரிவு செய்யப்பட்டார்.

CIM.NETWORK நிறுவனத்துடன் இணைந்து இரண்டாவது மாபெரும் கணனிக்கல்வி விழிப்புணர்வு கருத்தரங்கு கல்முனை ஸாஹிறாக் கல்லூரியில் 12.02.2006 ஆம் திகதி நடாத்தப்பட்டது. இதில் 200 க்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அமைப்பினை கல்முனை பிரதேச செயலகத்தில் பதிவதற்கான அனைத்து முயற்சிகளையும் சகோதர்களான ஸாஹிர் கரீம் மற்றும் எம்.ஜே.எம் அனஸ் அர்ப்பணிப்புடன் மேற்கொண்டார்கள். இதில் அமைப்பின் பெயர் ஒரு துறையினை மாத்திரம் குறிக்காமல் எல்லாத் துறைகளையும் உள்ளடக்கியவாறு அமைய வேண்டும் என்ற அங்கத்தவர்களின் கருத்தின் அடிப்படையில் அமைப்பின் பெயர் **"சமூக முன்னேற்ற ஆய்வு அமையம்"** என பெயர்மாற்றம் செய்யப்பட்டது. அல்லாஹ்வின் உதவியுடன் கல்முனை பிரதேச செயலாளர் ஏ.எச்.எம் அன்சார் அவர்களினால் 2006.03.21ம் திகதி அமைப்பு பதிவு செய்யப்பட்டது.

சகோதரர் றினோஸ் ஹனீபாவின் அயராத முயற்சியினால் Muslim Aid நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் இப்தார், ஊழ்ஹியா, கல்வி வழிகாட்டல் மற்றும் அனர்த்தங்களின் போது உதவி புரிவதாக Muslim Aid நிறுவன பணிப்பாளர் 2006.02.20ஆம் திகதி உறுதிப்படுத்தினார்.

சகோதரர் எம்.ஜே.எம் அனஸ் முயற்சியால் JobsNet மூலம் அமைப்பின் ஊழியர்களின் திறனை அதிகரிப்பதற்கான பயிற்சி பட்டரைகளை நடாத்த 06.07.2006ஆம் திகதி நிதி உதவி அளிக்கப்பட்டது. இந்நிதியை அமைப்புக்கு வழங்கி வைப்பதில் அயராது உழைத்தவர் அமைப்பின் கணக்காய்வாளர் சகோதரர் ஏ.எம்.எம். சியாம் என்பது நினைவு கூறத்தக்கது.

2006.09.20 ஆம் திகதி அமைப்பின் பொதுச் சபைக் கூட்டத்தில் சகோதரர் எஸ்.எல்.எம் அனஸ் அமைப்பிற்கான புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

முதலாது ரமழான் விஷேட நிகழ்ச்சி "விடைபெறும் ரமழான் விட்டுச் சென்றவை" என்ற தலைப்பில் கமு/அல் ஸுஹறா வித்தியாலயத்தில் 21.10.2006ம் திகதி இடம் பெற்றது. இதில் வளவாளர்களாக மௌலவி நதீர் மற்றும் றினோஸ் ஹனீபா ஆகியோர் உரையாற்றினார்கள்.

Sri Lanka Red Cross Society மூலம் அதன் அம்பாறைக் கிளையில் Youth Camp 24, 25, 26, 27. 10.2006 ஆம் திகதிகளில் AM/Saddhathissa Maha Vidyalaya வில் இடம்பெற்றது. இதில் அமைப்பின் பொருளாலர் சகோதரர் எஸ்.எம்.எம் சியாத் தலைமையில் 5 அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.

✐ அமானா வங்கியில் 21.02.2007ம் ஆண்டு சகோதரர்களான எம்.ஜே.எம் அனஸ், எஸ்.எல்.எம் அனஸ் மற்றும் எஸ்.எம்.எம் சியாத் ஆகியோரின் முயற்சியால் அமைப்பிற்கான Account திறக்கப்பட்டது.

✐ அல் அமீன் பாலர் பாடசாலை (கல்முனை -13) க்கு UNICEF னால் வழங்கப்பட்ட இலவச சீருடை 20.04.2007ம் ஆண்டு 30 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

✐ ரமழான் இப்தார் நிகழ்ச்சி 10.09.2007ஆம் ஆண்டு கல்முனை மஸ்ஜிதுல் ஆலி, பள்ளிவாசலில் MUSLIM AID நிறுவனத்தின் உதவியோடு இடம்பெற்றது இதற்கு பொறுப்பாக சகோதர்களான எஸ்.எல்.எம் அனஸ் மற்றும் எம்.ஐ.எம் நியாஸ் இருந்தார்கள்.

✐ கல்முனை பட்டதாரிகள் அமையத்தின் தலைவர் ஏ. ஜெஸ்மின் ஊடாக 22.09.2007ஆம் திகதி கமு/அல் ஸுஹறாவித்தியாலயத்தில் நடைபெற்ற கல்முனை பாட்டதாரிகள் அமையத்தின் இப்தார் நிகழ்வுக்கு நிதி உதவி செய்யப்பட்டது.

✐ சமூகத்தின் முக்கிய பிரச்சினைகள் இனங்காணல் தொடர்பான கலந்துரையாடல் 16.11.2007ஆம் ஆண்டு கல்முனை றசீட் கட்டிடத்தில் இடம்பெற்றது இதில் உலமாக்கள், கல்விமான்கள் மற்றும் சமூக சேவையாளர்கள் கலந்து கொண்டார்கள்.

✐ அமைப்பிற்கான நிருவாக அலுவலகம் கல்முனை ரசீட் கட்டிடத்தில் 2007.12.16ஆம் திகதி திறக்கப்பட்டதுடன் மாணவர்களின் கணனி மற்றும் ஆங்கில அறிவினை மேம்படுத்தும் நோக்கில் அதற்கான பயிற்சி வகுப்புக்கள் 2007.12.29ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதற்குப் பொறுப்பாக சகோதரர். எம்.ஜே.எம் அனஸ் இருந்தார்.

✐ கல்முனைக்குடி சுதேச வைத்தியசாலையை மீள் நிர்மாணம் செய்யக் கோரி 01.02.2008ஆம் திகதி பிரதி அமைச்சர் நிஜாமுத்தீன் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் சகோதர்களான எம்.ஐ.எம்.நியாஸ், றினோஸ் ஹனீபா, எம்.ஜே.எம் அனஸ் மற்றும் டொக்டர். ஆதம் ஆகியோர் செறோ அமைப்பின் சார்பாக கலந்து கொண்டனர்.

✐ 02.02.2008ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற UNDP யின் சமாதானம் தொடர்பான கருத்தரங்கில் சகோரர்களாக எஸ்.எம்.எம் சியாத் மற்றும் எம்.ஜே.எம் அனஸ் கலந்து கொண்டார்கள்.

SOND நிறுவனத்தின் மூலம் நிதி முகாமைத்துவ பயிற்சி பட்டரை ஒன்று 10.04.2008ஆம் திகதி Village of Hope Brothers House, பாண்டிருப்பில் இடம்பெற்றது. இதில் அமைப்பின் செயலாளர் எம்.ஜே.எம் அனஸ் கலந்துகொண்டார். SOND நிறுவனத்தில் SERO அங்கத்துவ அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

சகோதரர் றினோஸ் ஹனீபாவின் முயற்சியால் சம்மாந்துறை இஸ்மாயில் புரத்தில் UNDP இன் அனுசரனையோடு சமாதான விழிப்புணர்வு கருத்தரங்கு 2008.07.26ல் இடம்பெற்றது. இதில் 60க்கும் மேற்பட்ட குடும்பத் தலைவர்கள் கலந்து கொண்டார்கள், செறோ சார்பாக தலைவர் அனஸ், எம்.எச்.எம் பிரதௌஸ், ஏ.எம் றிசாட், எஸ்.எம்.எம் சியாத், எம்.ஐ.எம் நியாஸ் மற்றும் எம்.ஜே.எம் அனஸ் கலந்து கொண்டனர்.

2008.08.14ல் நடைபெற்ற ASIAN PARTNERSHIP - SRILANKA நிறுவனத்தினுடைய TSUNAMI RECOVER PROJECT நான்கு நாள் கருத்தரங்கிற்கு அமைப்பின் சார்பாக இணைப்புச் செயலாளர் எம்.ஐ.எம் நியாஸ் கலந்து கொண்டார்.

சம்மாந்துறை இஸ்மாயில் புரத்தில் Center for Poverty Analysis (CEPA) நிறுவனத்துடைய செயற்திட்ட பயிற்சி பட்டரை 2008.12.13ம் திகதி ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி, பயிற்சி நிலையத்தில் இடம் பெற்றது. இதில் சகோதரர் றினோஸ் ஹனீபா கலந்து கொண்டார்.

செறோவின் 2009ம்ஆண்டிற்கான முதலாவது கலண்டர் 300 பிரதிகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

கல்முனை ஸாஹிறாக் கல்லூரி மற்றும் மஹ்மூத் மகளிர் கல்லூரி உயர்தர மாணவ, மாணவிகளுக்கு "எவ்வாறு கற்பது" என்ற தலைப்பில் 05.01.2009ம் திகதி கருத்தரங்கு நடைபெற்றது வளவாளராக றினோஸ் ஹனீபா கலந்து கொண்டார்.

"பரிதாப நிலை ஓர் ஆய்வு" தலைப்பில் கல்வியில் சமூகம் பின்தங்கி செல்கிறது என்பதனை சமூகத்திற்கு சுட்டிக்காட்டும் முகமாக 2009.06.14ம் திகதி முதல் துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டது.

Muslim Aid நிறுவனத்தின் உதவியோடு 10.09.2009 தொடக்கம் 13.09.2009 வரை மாணவர்களுக்கான ஒரு நாள் தலைமைத்துவ பயிற்சி வகுப்பு 5 ஊர்களில் நடாத்தப்பட்டது. இதில் பின்வருவோர் நிகழ்ச்சிக்கான பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டார்கள்.

மருதமுனை : சகோ. சவ்மி PHI (GLISTENS YOUTH CLUB)
சம்மாந்துரை : சகோ. மஜீத் English Teacher
கல்முனை : சகோ. சஜாத் இஸ்லாஹி (AIMS)
சாய்ந்தமருது : சகோ. பாயிஸ்
நிந்தவூர் : சகோ. சக்கி (LLB)

இவ் நிகழ்ச்சிக்கான இணைப்பாளர்களாக சகோதர்களான எஸ்.எம்.எம் சியாத் மற்றும் எம்.ஜே.எம் அனஸ் நியமிக்கப்பட்டார்கள்.கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

2009.09.06ஆம் திகதி தென்கிழக்கு பல்கலைக்கழக பள்ளிவாசலில் மாணவர்களுக்கான இப்தார் நிகழ்வும் "சமூக புணருத்தானப்பணியில் இளைஞர்களின் பங்களிப்பு" என்ற தலைப்பில் சகோதரரர் றினோஸ் ஹனீபா மற்றும் அஷ்ஷெய்க் வாஜித் (நளீமி )சிறப்புரையாற்றினார்கள்.

சாய்ந்தமருது அல் வாஹிதிய்யா அரபிக் கல்லூரியிலும் தலைமைத்துவ பயிற்சி பட்டரை 09.11.2009ஆம் திகதி நடந்தது. இதில் அரபுக்கல்லூரி மாணவர்கள் உட்பட சுமார் 60 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டார்கள். சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

Muslim Aid அமைப்பின் மூலம் ஊழ்ஹியாவுக்காக நான்கு மாடுகள் 20.11.2009ஆம் திகதி தரப்பட்டது.

கல்முனைக்குடி அலியார் வீதியில் அமைந்துள்ள செறோ பாலர் பாடசாலையின் LKG,UKG கான புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான துண்டுப்பிரசுரம் 12.12.2009ம் திகதி வெளியிடப்பட்டது.

2010.09.25ம் ஆம் திகதி இலவச ஆங்கில வகுப்பு சாய்ந்தமருது அல் கமறுன் வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அங்குராப்பன வைபவத்திற்கு பிரதம அதிதியாக ஜனாப். முஸ்தபா ஆசிரியர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

✎ செறோவின் 2010ம்ஆண்டிற்கான இரண்டாவது கலண்டர் 500 அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

✎ சாய்ந்தமருது வாஹிதிய்யா அரபுக்கல்லூரியின் அதிபர், மௌலவி பவாஹிரின் வேண்டுகோளுக்கிணங்க 2010.01.04ம் திகதி இடம்பெற்ற விஷேட கூட்டத்தில் அமைப்பின் உபதலைவர் றினோஸ் ஹனீபா , அரபுக்கல்லூரியின் தலைவர் நசீரிடம் (பொறியியலாளர்) ரூ 20,000 பெருமதியான கணனி ஒன்றை வழங்கிவைத்தார். இதற்கானஅனுசரனை கல்முனை ஜெஸீலா கோல்ட் ஹவுஸ்.

✎ Muslim Aid அமைப்பின் மூலம் ஊழ்ஹியாவுக்காக மூன்று மாடுகள் 08.11.2010 ஆம் திகதி தரப்பட்டது.

✎ NAITA நிறுவனத்தில் கணனி கல்வியினை பயின்ற மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க NAITAவின் இடமாற்றத்தை தற்காலிகமாக நிறுத்தி, 12.12.2010ஆம் திகதி மாணவர்களை சேர்க்கும் பணியிலும், கஷ்டப்பட்ட மாணவர்களுக்கு ரூ.2500 வினை கொடுப்பதற்கான செயற்திட்டத்தை ஆரம்பித்து அதற்குப் பொறுப்பாக சகோதர்களான ஸாஹிர் கரீம், செயலாளர் அனஸ் மற்றும் கணக்காளர் சியாத் நியமிக்கப்பட்டார்கள், இதன் பயனாக மாணவர்கள் தமது கல்வியினை தடங்கள் இன்றி மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

✎ செறோவின் பாலர் பாடசாலை கலை நிகழ்ச்சியும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் கல்முனை நகர மண்டபத்தில் 2010.12.12ஆம் திகதி இடம்பெற்றது. இதில் பிரதம அதிதிகளாக முன்னால் மாநகர சபை முதல்வர் கௌரவ செனடர் அல் ஹாஜ் எஸ்.ஸட்.எம் மசூர் மௌலான மற்றும் பிரதி மேயர் கொளரவ ஏ.ஏ. பசீர் கலந்து கொண்டனர்.

✎ Muslim Aid நிறுவனத்தின் மூலம் ஊழ்ஹியா செயற்திட்டம் 2010.11.19ம் திகதி சம்மாந்துறையில் அமைப்பின் இணைப்பாளர் எம்.ஐ.எம் மஜித் தலைமையில் இடம் பெற்றது இதில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த ஆறுபது பேர் பயனடைந்தார்கள்.

✎ Muslim Aid நிறுவனத்தின் உதவியோடு 2011.01.27ஆம் திகதி ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 10 இலட்சத்திற்கும் அதிகபெறுமதி கொண்ட நிவாரண பொருட்களை கல்முனை, சாய்ந்தமருது, நாவிதன்வெளி மற்றும் காரைதீவு பிரதேச செயலாளர்களினுடாக 1500 பயனாளிகளுக்கு வழங்கிவைக்கப்பட்டமை எமது சேவையில் ஒரு மைல் கல்லாகும்.

சகோதரர் றினோஸ் ஹனீபா முயற்சியால் அகில இலங்கை ஜனாஸா சங்கத்தினூடாக 24.01.2011ஆம் திகதி ஆடை மற்றும் வீட்டுக்கான அத்தியவசிய பொருட்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டது.

Muslim Aid நிறுவனத்தின் உதவியோடு "சர்வமதங்களுக்கிடையிலான நல்லுறவைப் பேணல்" என்ற தலைப்பில் இந்நிகழ்ச்சி 2011.08.26ம் திகதி Sea Breeze Restaurant Sainthamaruthu ல் நடைபெற்றது. இதில் அனைத்து மதங்களையும் சேர்ந்த மதத் தலைவர்கள் உட்பட 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இஸ்லாம் : எஸ்.எச் ஆதம்பாவா மற்றும் அஷ்ஷெய்க் ஏ.ஆர்.எம் ரமீஸ்
பௌத்தமதம் : ரன்முதகல சங்கரத்ன தேரோ
ஹிந்துமதம் : கே.யோஹுதாச குருக்கள்
கிறிஸ்தவமதம் : ஏ. கிருபராஜா

ஜமாஅதே இஸ்லாமியின் உதவியோடு சாய்ந்தமருது Youth Centre இல் இப்தார் 17.08.2012ம் திகதி இடம்பெற்றது சிறப்பு பேச்சாளராக சமுர்த்தி உத்தியோகத்தர் பளீழ் கலந்து கொண்டார். இதில் 150பேர் கலந்து சிறப்பித்தனர்.

சாய்ந்தமருது ஜம்இய்யாவின் உதவியோடு உழ்ஹியா செயற்திட்டம் 2012ல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதில் 80 பேர் பயன்பெற்றனர்.

செறோவின் கலை கலாசாரா பிரின் மூலம் அலுவலக நூல் நிலையம் 18.10.2012 ம் திகதி கலாபூசனம் யு.எல்.எம் ஆதம்பாவா ஆசிரியர் தலமையில் திறக்கப்பட்டது. இதில் ஒய்வு பெற்ற அதிபர் எம்.எம்.எச் காதர் மற்றும் கவிஞர் விஜிலி கலந்து சிறப்பித்தனர்.

சகோதரர் எஸ்.எல்.எம் அனஸ் முயற்சியால் பட்டதாரி மாணவர்களுக்கான ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான மாபெரும் கருத்தரங்கு ஒன்றினை கல்முனை கிறிஸ்தவ மண்டபத்தில் 06.012013ஆம் ஆண்டு நடாத்தப்பட்டது இதில் வளவாளர்களாக ஏ.எச்.எம் நசீர (SLAS) மற்றும் எஸ். றிஸ்வான் (SLAS) உட்பட 60 மாணவர்கள் கலந்து கொண்டார்கள். இதில் அனைத்து கணனி வடிவமைப்பு, ஊடக மற்றும் விளம்பர உதவியினையும் எம். ஜரூக் மொஹமட் மேற்கொண்டார்.


அமைப்பின் நிறைவேற்றுச் சபை உறுப்பினர்களின் 2013.01.10ம் திகதி இடம்பெற்ற வாக்களிப்பின் அடிப்படையில் நடப்பாண்டிற்கான புதிய தலைவராக றினோஸ் ஹனீபா தெரிவு செய்யப்பட்டார்.

செறோ வின் பத்தாண்டு நிகழ்வினை முன்னிட்டு திறந்த கவிதை, கட்டுரை போட்டிகள் 08.02.2013ம் திகதி ஆரம்பிக்கபட்டன. இதன் பொறுப்பாசிரியர்களாக கலாபூசனம் யு.எல்.எம் ஆதம்பாவா மற்றும் கவிஞர் விஜிலி ஆகியோர் நியமிக்கப்பட்டார்கள். அமைப்பின் செயலாளர் எம். ஜரூக் மொஹமட் மூலம் கணனி வடிவமைப்பு, ஊடக மற்றும் விளம்பர உதவிகள் சிறப்புர மேற்கொள்ளப்பட்டன.

சாய்ந்தமருது அல் ஜலால் பாடசாலையில் "எவ்வாறு கற்பது" என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்று 2013.02.07ம் திகதி கல்வி மற்றும் ஆய்விப் பிரிவின் பொறுப்பாளர் சகோதரர் ஏ. அனீஸ் யின் முயற்சியால் இடம் பெற்றது, வளவாளராக சகோதரர். நினோஸ் ஹனீபா கலந்து கொண்டார்.

